# தேவஇயல்

## 1. இறையியலின் அறிமுகம்

<u>**பொதுவான விதம்:**</u> தேவனைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள உபதேசங்களின் அடிப்படையில் தேவனைப் பற்றி படிப்பதே இதன் பொதுவான அர்த்தம் ஆகும்.

<u>**குறிப்பிட்ட விதம்:**</u> திரியேக தேவனைப் பற்றியும் பிதாவை பற்றியும் படிப்பதே குறிப்பிட்ட இதனுடைய அர்த்தம் ஆகும்.

இறையியலை படிக்கும்போது “ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற **கர்த்தர்** நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்” (எரேமியா 9:23,24) என்கின்ற மனப்பாங்குடன் காணப்படவேண்டும்.

**பொதுவாக இரண்டு விதமான அறிவு உள்ளது.**

1. ஒரு காரியத்தை குறித்து மேலோட்டமாக அறிவின் அடிப்படையில் அறிந்துகொள்வது (அறிந்து...)
2. ஆனால் அதே காரியத்தை அனுபவிப்பது என்பது அனுபவபூர்வமான அறிவாகும் (உணர்ந்து...)

## 2. இறையியலின் வரையறை

இறையியலில் ஆங்கில வார்த்தை (தியாலஜி) Theology. இது இரு கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததாகும். ஒன்று ‘தியோஸ்’ (Theos) மற்றொன்று ‘லோகோஸ்’ (Logos) என்பதாகும் ‘தியோஸ்’ என்பதற்கு தேவன் என்றும் ‘லோகோஸ்’ என்பதற்கு வார்த்தை என்றும் பொருளாகும். ஆகவே ‘தியாலஜி’ என்பது தேவனைப் பற்றிய வார்த்தையை படிப்பதாகும்.

## 3. தேவனுடைய இருப்பு

தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வேதம் போதிக்கிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் (எபி 11:6). தேவனில் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற நியதி இல்லாதிருக்குமேயானால் வெறுமனே எளிமையான நிலையில் எல்லோரும் காணும்படி தேவன் தோன்றி தன்னை இருக்கிறவராக இந்த உலகத்திற்கு காண்பித்து நிரூபித்திருக்கமுடியும். ஆனால் அவர் அப்படி செய்திருந்தால் விசுவாசிக்கவேண்டும் என்பதன் அவசியம் இல்லாமல் போயிருக்கும். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:31).

விவாசத்தினால் தேவனை நம்பவேண்டும் என்று சொல்வதனால் அவர் இருக்கிறார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார் (சங்கீதம் 19:1-4). உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார் (பிரசங்கி 3:11).

நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் ஒரு புரிந்துகொள்ளுதல் இருக்கிறது அதாவது நம்முடைய வாழ்க்கைக்கு பின் இதை விட மேலான ஒரு வாழ்வு இருக்கிறது என்பது தெரிகிறது அறிவுபூர்வமாக ஒருவேளை இதை நாம் மறுக்கலாம். ஆனால், தேவனுடைய சமூகம் நம்மைச் சுற்றியும் இருந்துகொண்டிருக்கிறது. சிலர் தேவன் இருக்கிறார் என்பதை மறுக்கிறார்கள் அப்படிப்பட்டவர்களை வேதம் கடிந்துகொள்கிறது ‘தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லுகிறான் (சங்கீதம் 14:1). வரலாற்றில் முழுவதுமாக பார்க்கும்போது எல்லாக் கலாச்சாரத்திலும் நாகரிக மேம்பாட்டிலும் எல்லாக் கண்டங்களிலும் உள்ளவர்கள் தேவன் இருக்கிறார் என்பதை நம்புவதற்கு ஏதோ ஒன்று நிச்சயமாக இருக்கவேண்டும்.

தேவன் இருக்கிறார் என்பதற்கு நான்கு விதமான விவாதங்கள்

a. **அண்ட அமைப்புசார் விவாதம் (Cosmological Argument):** எந்த ஒரு விளைவுகளுக்கும் ஓர் எதிர் விளைவு அல்லது காரணம் இருக்கும். உலகமும் அதில் உள்ளவைகள் எல்லாம் ஒரு செயல் எனில் இந்த செயல்களை செயல்படுத்தினவர் அல்லது கொண்டுவந்த வேறொரு செயல் நிச்சயமாக இருக்க வேண்டும் அதாவது இவைகளெல்லாம் உருவாகுவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். காரணமாவதற்கு இறுதியாக எல்லாவற்றையும் எல்லா செயல்களுக்கும் காரணமாய் இருக்கிற ஒருவர் இருக்கவேண்டும். அவருக்கு மேலே அவரை உருவாக்குவதற்கு காரணமாக யாரும் இல்லை. தன்னை உருவாக்க ஒருவரும் இல்லாமல் இருக்கிறவர்தான் தேவன் என்பதுதான் இந்த அண்ட அமைப்புசார் விவாதம்.
b. **நோக்க உளவியல் விவாதம் (Teleological Argument):** உலகம் மிக நன்றாக மற்றும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு இருப்பதினால் இதற்குப் பின்னால் இதனை உருவாக்கிய அல்லது வடிவமைத்த ஒருவர் நிச்சயமாக இருக்கவேண்டும். உதாரணமாக பூமி தற்போது இருக்கின்ற அந்த ஸ்தானத்திலிருந்து சூரியனுக்கு சற்று அருகில் சென்றாலோ அல்லது சற்று தூரமாய் இருந்தாலும் பூமியில் வசிக்கின்ற மக்கள் உட்பட சகல ஜீவராசிகளும் அழிந்து போய்விடும் ஒருவரும் உயிர் வாழ முடியாது. நம்முடைய தட்ப வெப்பநிலையில் சில சதவிகிதம் கூடுதலாகவோ குறைவாகவோ இருந்தால் பூமியில் இருக்கின்ற எல்லா உயிரினங்களும் அழிந்துவிடும். நம் உடலிலுள்ள ஓர் அணு உருவாவதற்கு அனேக புரதஅணுக்கள் தேவை. ஒரு சிறிய உயிரணுவில் மில்லியன் கணக்கான புரத மூலக்கூறுகள் அடங்கி இருக்கின்றன. 'டேலோஸ்' என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் 'நோக்கம்' அல்லது 'குறிக்கோள்' அல்லது 'இலக்கு' என்பதாகும். ஆகவே ஒவ்வொரு நேர்த்தியான வடிவமைப்பின் பின்னாலும் ஒரு மேலான நோக்கம் இருக்கின்றது என்ற வாதம் தான் இந்த நோக்க உளவியல் விவாதம்.
c. **மெய்ப்பொருள் ஆய்வு விவாதம் (Ontological Argument):** இந்த விவாதம் கருத்துக்களின் அடிப்படையில் தேவன் இருக்கிறார் என்று நிரூபிக்கிறது. இது தேவனைப் பற்றிய வரையறையுடன் தொடங்குகிறது. தேவனைத் தவிர வேறு ஒரு பெரிய காரியம் இருக்கமுடியாது. இருப்பது இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் பெரியது; ஆகையால் அந்த பெரிய காரியம் தேவனாகதான் இருக்கவேண்டும். தேவன் இல்லாவிட்டால் அந்த பெரிய காரியம் இருந்திருக்கமுடியாது. ஆனால் இது தேவனைக் குறித்த முரண்பாடான விளக்கமாகும். Ontological என்ற பதத்தில் 'Ont' என்பது ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து வருவிக்கப்பட்டதாகும். அதன் அர்த்தம் 'இருத்தல்' அல்லது 'இருப்பு' என்பதாகும்.
d. **நெறிமுறை சார் விவாதம் (Moral Argument):** இது தார்மீக ஒழுக்கநெறி மற்றும் நன்னடத்தை பற்றியது ஆகும். வரலாற்றில் எல்லாக் கலாச்சாரத்திலும் ஒரு நியதி அல்லது ஒழுங்குமுறை உண்டு. அனைவருக்குமே சரி அல்லது தவறு குறித்த அறிவு உண்டு. கொலை, பொய், திருட்டு, தவறான நடத்தை இவைகளெல்லாம் தவறு அல்லது சரி என்று மறுப்பும் ஆதரவும் தெரிவிக்கின்ற மக்கள் எல்லா தேசங்களிலும் இருக்கிறார்கள், நன்மை எது? தீமை எது? என்று அறிகிற வல்லமை எல்லா மனிதருக்கும் இருக்கிறது. இந்த உணர்வு பரிசுத்தமான தேவனிடத்திலிருந்து வரவில்லை எனில் எங்கேயிருந்து வருகிறது. இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் மக்கள் தேவனை மறுதலிக்கவே செய்வார்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் (ரோமர் 1:25). மேலும் ஜனங்கள் போக்குச்சொல்ல இடமில்லை எனவும் வேதம் அறிவுறுத்துகிறது (ரோமர் 1:20). தேவன் இருக்கிறார் என்றால் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயல்களுக்கும் அவரிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதனாலும், தேவன் இல்லை என்றால் நாம் நம் விருப்பப்படி வாழலாம் என்றும் கருதுகிறார்கள். ஆனால் தேவன் இருக்கிறார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. தேவன் இல்லை என்பதை நிரூபிக்கும் கடுமையான முயற்சியே தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

கிறிஸ்தவர்கள் என்கிற நிலையில் நாம் தேவனுடன் தினமும் பேசுவதால் அவர் இருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். அவர் பேசுவதை நான் சத்தமாக கேட்பதில்லை ஆனால் அவரின் பிரசன்னம், வழிநடத்துதல் மற்றும் கிருபை ஆகியவற்றை உணர்கிறோம். நமது வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளுக்கு அல்லது சம்பவங்களுக்கு விளக்கம் கொடுக்கும்பொழுது தேவன் இருக்கிறார் என்பதைத் தவிர வேறு விளக்கம் கொடுக்கஇயலாது.

## 4. தேவனை அறிந்து கொள்வதில் சாத்தியம்

ஆம் என்பதும் பதில் ஆகும்; இல்லை என்பதும் பதில் ஆகும்

இல்லை என்பதற்கு 'எல்லையற்ற தேவனை நம்முடைய குறைவுள்ள அறிவினால் முழுவதுமாக அறிந்து கொள்ளமுடியாது'. தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? (யோபு 11:7) என்று கேள்வி கணையாக வாசிக்கின்றோம்.

ஆம் என்பதற்கு 'எல்லையற்ற தேவன் தம்மை வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கிற விதத்திலும் மற்றும் அவரோடு நாம் கொள்ளும் தனிப்பட்ட உறவிலும் அவரை அறிந்துகொள்ளமுடியும்'. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:3).

## 5. தேவன் இருக்கிறார் என்பதற்கான வெளிப்பாடுகள்

<u>வெளிப்பாடுகள் இரண்டு வகைப்படும்</u>

a. <u>பொதுவான வெளிப்பாடு:</u> இது இயற்கை படைப்புகள், மனிதன், மனசாட்சி ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்துவது ஆகும் (சங்கீதம் 19:1). இதில் தேவன் தாம் இருப்பதை இரண்டு நிலைகளில் வெளிப்படுத்துகிறார்.

b. <u>சிறப்பான வெளிப்பாடு:</u> இது இயேசு கிறிஸ்துவின் மாம்ச வெளிப்பாடு மற்றும் வெளிப்படுத்தப்பட்ட தற்போதுள்ள வேதவார்த்தை மூலம் தேவன் தாம் இருப்பதை வெளிப்படுத்துவதாகும் (யோவான் 1:18).

i. புறநிலை சான்றுகள் (Objective evidence) - ஒரு பொருளையோ அல்லது ஒரு காரியத்தையோ கண்களால் பார்த்து அதை நிரூபிப்பதாகும் (எடுத்துக்காட்டு: இயற்கை)

ii. அகநிலை சான்றுகள் (Subjective evidence) - ஒரு காரியத்தை கண்களால் பார்க்க முடியாமல் இருந்தாலும் அவைகளின் மூலம் நிரூபிப்பதாகும் (எடுத்துக்காட்டு: மனசாட்சி)

இந்த இரண்டு நிலைகளின்மூலம் தேவன் தான் இருப்பதை நிரூபிக்கிறார். தேவன் இருப்பதை மற்றவர்களிடம் நாம் தெரியப்படுத்த விருப்பப்படும்போது நாம் எப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்களாய் நாம் இருக்கவேண்டும் என்று பேதுரு கூறுகிறார். 'கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:15)

**வேதாகம ஆதாரங்கள்:** தேவனை அறிவதில் வேதமே முதன்மையான ஆதாரமாய் இருக்கிறது. வேதாகமத்தின் மூலமே தேவன் தாம் எப்படிப்பட்டவர் என்பதை விளக்குகிறார். தாம் இருப்பதையும், இருக்கின்ற தேவனாகிய தாமே இந்த உலகத்தை படைத்ததையும் பரிசுத்த எழுத்துக்களின் மூலம் விளக்குகின்றார். உலகத்தை படைத்த தேவன் இந்த உலகம் அனைத்தின் மேலும் ஆளுகை செய்கிறார். இந்த வேதத்தின் மூலமே தேவனின் பண்புகள் அவரின் கிரியைகள் அனைத்தையும் அறிகிறோம். இந்த வேதமே தேவன் தன்னை எப்படியெல்லாம் மனிதனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை பற்றி கூறுகிறது. நேரடி தரிசனங்கள் மூலமாகவும், சொப்பனங்கள் மூலமாகவும், தேவதூதர்கள் மூலமாகவும், தம்முடைய மக்களின் மூலமாகவும், வெளிப்படுத்தின விதங்களைப் பற்றியும் கூறுகிறது.

**இயற்கை ஆதாரங்கள்:** இதன் வாயிலாக நாம் தேவனின் மகிமையைக் காண முடிகிறது. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது (சங்கீதம் 19:1). படைப்பில் அவரது செயலையும் அவரின் வல்லமையையும் நாம் காணமுடிகிறது. அவருடைய நித்திய வல்லமையை சிருஷ்டிப்பில் காணமுடிகிறது (ரோமர் 1:20). அவருடைய தன்மையை அல்லது பண்பையும், இயற்கையை அவர் போஷிக்கிறதையும் (அப் 14:17) காணமுடிகிறது.

## 6. தேவனை படைத்தது யார்?

தேவன் இல்லை என்று கூறுகிறவர்களும் சந்தேகவாதிகளும் எழுப்புகிற கேள்வி என்னவெனில் எல்லா பொருட்களுக்கும் ஒரு மூல காரணம் இருக்குமேயானால் தேவனுக்கும் ஒரு மூலகாரணம் அவசியம் இருக்கவேண்டும் என்பதாகும். பதில் இதுதான்: ஒருவேளை தேவனுக்கு மூலகாரணம் தேவைப்பட்டால் அவர் தேவனாகவே இருக்கமுடியாது. ஒன்றும் இல்லாமையிலிருந்து எதுவும் வராது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். தேவன் ஏதோ ஒன்றானால் அதற்கு மூலகாரணம் இருக்கவேண்டும் என்ற கேள்வி தந்திரமானது. ஏனென்றால் தேவன் எங்கிருந்தோ வந்தார் என்ற பொய்யான யூகத்தை உருவாக்கி அது எங்கிருந்து இருக்கும் என்றும் கேட்கிறது. இந்த கேள்வி முட்டாள்தனமானது என்பதுதான் பதில். காரணம் நீலநிறம் எப்படி மணக்கும்? என்று கேட்பது போல்

இருக்கின்றது. தேவன் என்பவர் உண்டாக்கப்படும் ஒரு பொருளும் அல்ல; மூலகாரணமுடைய வகையைச் சார்ந்தவரும் அல்ல. தேவன் உருவாக்கப்பட முடியாதவர். இருக்கிறவராகவே இருக்கிறவர். ஒன்றும் இல்லாமையிலிருந்து ஒன்றும் வராது. ஒன்றுமில்லாமை என்ற ஒரு காலகட்டம் இருந்திருக்குமேயானால் நாம் காண்கின்ற எதுவுமே இருக்காது ஆனால், நாம் காண்கிற இவையெல்லாம் இருக்கின்றததே. ஆகவே, எதுவுமே இல்லாத வெறுமை நிலை என்று எதுவும் இருக்கமுடியாது ஏதோ ஒன்று எப்போதுமே இருந்துகொண்டே இருந்து இருக்கவேண்டும். அப்படியாக எப்போதுமே இருந்து கொண்டேஇருக்கிற பொருளைத்தான் நாம் தேவன் என்கிறோம். தேவன் என்பவர் மூலகாரணம் இல்லாத ஒருவர். அவரிலிருந்துதான் எல்லாமே தோன்றியது.

## 7. தேவனுடைய ஆள்தன்மை

ஆள்தன்மை என்பது ஒரு நபரின் வெளித்தோற்றத்தை பற்றியது அல்ல; மாறாக அது ஒரு நபரின் உள்ளான நான்குவித கூறுகளை குறிக்கிறது.

a. <u>தன்னறிவு அல்லது விழிப்புணர்வு (self-awareness)</u> - நாம் யார் என்ற அறிவைப் பெற்றிருப்பதுதான் தன்னறிவு அல்லது விழிப்புணர்வு எனப்படும்.

b. <u>நுண்ணறிவு அல்லது சிந்திக்கும் திறன் (Intelligent or ability to think)</u> - நாம் விலங்குகள் மற்றும் பறவைகளை காட்டிலும் மிகவும் நுண்ணறிவுகொண்டவர்கள். தேவனால் படைக்கப்பட்ட மனிதன் திட்டமிட்டு வடிவமைப்பது போல, விலங்குகளுக்கு அறிவு இருந்தாலும் அப்படி செய்ய இயலாது. விலங்குகள் தங்களுடைய மூளையின் அறிவை பயன்படுத்துவதைக் காட்டிலும் தங்கள் உள்ளுணர்வை பயன்படுத்துகின்றன. விலங்குகளை கட்டுப்படுத்தும் திறமையை தேவன் மனிதனுக்கு கொடுத்திருந்தார் (ஆதி 1:28).

c. <u>சுய சுத்தம் அல்லது சுய தீர்மானம் (Will Power)</u> - இது நாம் சுயமாக தீர்மானம் எடுக்கும் நிலையை குறிக்கிறது. மனிதனின் தீர்மானம் எடுக்க கூடிய திறமையே சுயசுத்தம் எனப்படும். தேவன் மனிதனுக்கு தீர்மானம் எடுக்க கூடிய உரிமையை கொடுத்திருக்கிறார் எனவே மனிதன் தான் எடுக்கக்கூடிய தீர்மானங்களுக்கு அவனே பொறுப்பாளியாக இருக்கிறான் (உ.ம். ஆதி 3:17).

   - மனிதன் எடுக்கும் மிகச்சிறந்த முதல் தீர்மானம்: இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதே ஆகும்.
   - இரண்டாவது முக்கியமான தீர்மானம் என்னவெனில் அது திருமணத்தை பற்றியது ஆகும்.

d. <u>உணர்வுகள் (Emotions)</u> - உணர்வுகள் எல்லாம் மனதில் வலிமையான உணர்ச்சிகளாக உள்ளன. உணர்வுகள் என்பது நமது உள்மனதில் நமக்குள் ஏற்படும் உணர்ச்சிகளாகும் (உ.ம். சோகம், அன்பு, சந்தோசம், பொறாமை, கோபம்….)

**வேத ஆதாரங்கள்:** தேவன் ஆள்தன்மையின் எல்லா மூலக்கூறுகளையும் கொண்டிருக்கிறார்.

- தன்னறிவு - இருக்கிறவராக இருக்கிறேன் (யாத்திராகமம் 3:14).
- நுண்ணறிவு - மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ? (சங்கீதம் 94:10)
- சுய சுத்தம் - தேவன்…. தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார் (சங்கீதம் 15:3).
- உணர்வுகள்
  - துக்கம் - தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் **கர்த்தர்** மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது (ஆதி 6:6).
  - கோபம் - **கர்த்தர்** அவன்மேல் கோபமானார் (1 இராஜா 10).
  - பாவத்தை **கர்த்தர்** வெறுக்கிறார் (நீதி 6:16).
  - பக்தி வைராக்கியம்: நான் **கர்த்தர்**, இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் (ஏசாயா 42:8)
  - இரக்கம்: தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே (எபே 2:4)
  - சந்தோஷம்: அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் (செப்பனியா 3:17)
  - அன்பு: தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16; 1 யோவான் 4:8)

- தேவனுக்கென்று கொடுக்கப்பட்ட தனிப்பட்ட பெயர்களே அவர் செய்யும் செயல்களின் மூலம் அவர் ஆள் தன்மை உள்ளவராக இருக்கிறார் என்பதை காட்டுகிறது. வேதத்தில் உள்ள ஒவ்வொரு தேவனுடைய பெயரும் ஒரு அர்த்தத்தை கொண்டுள்ளது. அந்த அர்த்தமுள்ள பெயர்கள் எல்லாம் அவருடைய குணாதிசயத்தை காட்டுகிறது.
    - யேகோவா யீரே (ஆதி 22:14) - கர்த்தர் பார்த்துக்கொள்ளுவர்
    - யேகோவா ரஃப்பா (யாத் 15:26) - பரிகாரியாகிய கர்த்தர், சுகமாக்குகிற கர்த்தர்
    - ஏல் ஷடாய் (ஆதி 17:1) - சர்வ வல்லமையுள்ள தேவன்
    - பிதா (மல்கியா 1:6; மத் 4:6,9)

## 8. தேவனுடைய உருவம்

தேவன் ஆவியாய் இருக்கிறார் என்று வேதம் வெளிப்படுத்துகிறது (யோவான் 4:24). ஆவிக்கு மாம்சமும் எலும்புகளும் இல்லை (லூக்கா 24:39) எனவே தேவன் சரீரத்தில் இல்லை, அவர் உருவமற்றவர். அவர் ஒரே நேரத்தில் எங்கும் வியாபகமாய் இருக்கிறார் (யோவான் 4:24). ஆவி என்பது கண்ணுக்கு புலப்படாததாய் இருக்கிறது (1 தீமோ 1:17; 6: 16) ஆவியாய் இருக்கிறவர் பார்க்கக்கூடாதவராக இருக்கிறார் (யோபு 37:21-23). ஆனால் தேவனுக்கு ரூபம் இல்லை என்று சொல்வது தவறாகும் ஏனெனில், தேவனின் ரூபத்தில்தான் மனிதன் உருவாக்கப்பட்டான் (ஆதி 1:26) மாறாக அவருக்கு உருவம் இல்லை என்பதுதான் உண்மை. அப்படியானால் கிறிஸ்துவானவர் மாம்ச உருவில் வந்தார் என்று கேட்கலாம் ஆனால் கிறிஸ்துவானவர் மனிதனுக்காக மரிக்கவும், உயிர்கவும் மனிதனுக்காக பரிந்துபேசக்கூடியவராக இருக்கவேண்டியதாதலால் அவர் மாம்சத்தை எடுத்தார். அதுதான் அவரை மனிதனோடு இணைக்கும் பாலமாக இருக்கிறது. தேவன் தம்மை மனிதருக்கு காட்டும்போதெல்லாம் அவர்கள் புரிந்து கொள்ளும்படியாக ஓர் உருவத்தை தெரிந்துகொண்டார்.

பரிசுத்த ஆவியானவர் கூட யோவான்ஸ்னானகனுக்கு தம்மை புறாவின் உருவில் வெளிப்படுத்தினார் அதனால் பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல்தான் இருக்கிறார் என்பதாகிவிடாது. ஆனால் கிறிஸ்துவைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவர் மனிதனுடைய காரியத்தில் ஈடுபடுபவர் ஆகையால் அவர் இன்றும் சர்வவல்லமையுள்ள தேவனாகவும்; அதே சமயத்தில் மனிதராகவும் உள்ளார். அவர் மறுரூப சரீரத்தில்தான் எடுத்துக்கொள்ளப்பட்டார்.

ஸ்தேவான் தேவதரிசனத்தை காண்கிறான் (அப் 7:55). அதில் அவன் பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டான். அங்கு கிறிஸ்துவானவர் மனிதனோடு தொடர்புடையவராகவும் தெளிவான இரட்சகராகவும் காணப்பட்டார். பிதாவை பார்க்கும்போது அவன் மகிமையை கண்டான். அதாவது மகிமை என்பது வேதத்தின் பல காரியங்களில் தொடர்புடையது. இந்த இடத்தில் மகிமை என்பது அவன் ஒளியைக் கண்டான் என்றே சொல்லலாம். ஆக, மனிதனுக்கு தம்மை வசனங்கள் மூலம் வெளிப்படுத்தும்போது மனிதன் தன்னை புரிந்துகொள்ளும்படியாக மனிதனின் உடல் அமைப்போடு தன்னை ஒப்புமைப்படுத்தி வெளிப்படுத்தியிருக்கிறார்.

**வேதபகுதி:** தேவனை மனிதனின் சரீர உருவஅமைப்புகளோடு ஒப்பிடுதலை (Anthropomorphism) 'அந்த்ரோபோமொற்பிஸம்' என்று கிரேக்கத்தில் சொல்வார்கள். இதற்கு 'மனித உருவியல்' அல்லது 'மனிதப் பண்புகளின் வெளிப்பாடு' என்று பெயர். 'அந்த்ரோபோஸ்' என்பதற்கு 'மனிதன்' என்றும், 'மொற்பை' என்பதற்கு 'வடிவம்' என்றும் பொருளாகும்.

தேவன் ஆவியாக இருந்தாலும் சில இடங்களில் மனித சரீரங்களோடும், செயல்பாடுகளோடும் ஒப்புமைப்படுத்தி வந்துள்ளது.

- உபாகமம் 33:27 - புயம்
- எரேமியா 18:17 - முதுகு
- 2 சாமு 22:16 - சுவாசிப்பவர் (நாசி)
- ஆதி 2:7 - ஊதுபவர்
- 2 சாமு 22:7 - காது
- உபாகமம் 11:12 - கண்கள்
- ஆதி 32:30 - முகம்

இதில் சொல்லப்பட்டுள்ளது போல தேவனுக்கு உண்மையில் சரீர அமைப்பு இல்லை; மாறாக மனிதனுக்கு புரிகின்ற வகையில் மனித உடலமைப்பு ஒப்புமைப்படுத்தியே இந்த வேதபகுதிகள் சொல்கிறது.

## 9. தேவன் ஆணா? அல்லது பெண்ணா?

வேத வாக்கியங்களில் இருந்து இரண்டு உண்மைகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

1. தேவன் ஆவியாக இருக்கிறார். அவருக்கு மனித குணாதிசயங்கள் அல்லது வரம்புகள் எதுவும் இல்லை.
2. தேவனைக் குறித்து வேதாகமத்தில் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட்டு உள்ள அனைத்து ஆதாரங்களும் அவரை ஆண் பாலில்தான் வெளிப்படுத்தியதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

தேவனுடைய சாயலில் மனித இனம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதி 1:27). தேவனுடைய சாயல் என்பது மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட ஒரு ஆவிக்குரிய அங்கமாகும். இது மனிதனுக்கும் தேவனுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும்படியாக கொடுக்கப்பட்டது. தேவனுடைய சாயலின்படி மனிதன் மற்றும் ஸ்திரீயானவள் வடிவமைக்கப்பட்டுள்ளனர் மற்றபடி அவர்கள் தேவனுடைய சிறிய பிறவிகள் அல்ல.

ஆண்களும் பெண்களுமாக படைக்கப்பட்ட மனித இனம் தேவனையும் ஆணாக அல்லது பெண்ணாக இருக்கிற பண்புகளோடு அவரை தேட வேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டது என்பது உடல் ரீதியாக உள்ள பண்புகளோடு எந்த ஒரு சம்பந்தமும் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். தேவன் தன்னை வெளிப்படுத்திய வடிவத்தில் பல சான்றுகள் உள்ளன. வேதம் அவரை பிதா என்று சுமார் 170 குறிப்புகளை கொண்டிருக்கிறது. ஒரு ஆண் தவிர வேறு எவரும் ஒரு பிதாவாக இருக்கமுடியாது. ஒருவேளை ஒரு பெண் வடிவத்தில் மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்தி இருந்தால் பிதா என்று இல்லாமல் பிதா என்று வருகின்ற இடங்களிலெல்லாம் அம்மா என்றே சொல்லப்பட்டு இருக்கும்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் ஆண்பால் பெயர்சொற்களே தேவனுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவானவர் தேவனை பிதா என்று பலமுறை குறிப்பிட்டுள்ளார். மற்ற சமயங்களில் தேவனை குறிப்பிடும் போதெல்லாம் ஆண்பால் பெயர்சொற்களையே பயன்படுத்தி இருக்கிறார். சுவிசேஷங்களில் மட்டும் பிதா என்ற வார்த்தையை கிறிஸ்து நேரடியாக 160 முறை தேவனுக்காக பயன்படுத்தியிருக்கிறார். உலகத்தின் பாவங்களுக்காக மரிப்பதற்கு மனித உருவில் வந்த திரியேக தேவனில் ஒருவரான கிறிஸ்துவானவர் மனித குலத்திற்கு தம்மை ஓர் ஆண் வடிவத்திலேயே வெளிப்படுத்தினார். வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனேக சம்பவங்களில் கிறிஸ்து பிதாவை குறித்து பேசும் போதெல்லாம் ஆண்பால் பெயர்சொற்களையே மேற்கோள்காட்டுகிறார்.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலருடைய நடபடிகளிலிருந்து வெளிப்படுத்தல் வரை 900க்கும் அதிகமான வசனங்களில் தேவனுக்காக பயன்படுத்தப்படுகிற ‘தெயோஸ்’ என்ற கிரேக்க வார்த்தையானது வருகிறது. இது கிரேக்கத்தில் ஓர் ஆண்பால் பெயர்ச்சொல்லாக இருக்கிறது. இந்த வார்த்தை தேவனுக்கு நேரடியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதவாக்கியங்களில் தேவனை குறிப்பிடுகின்ற எண்ணற்ற குறிப்புகளில் அவருடைய தலைப்புகள் பெயர்ச்சொற்கள் மற்றும் பிரதிபெயர்ச்சொற்கள் யாவும் ஆண்பாலில் குறிப்பிடப்பட்டிருப்பது ஓர் உறுதியான வகையில் தெளிவாக உள்ளது. தேவனை புரிந்துகொள்ள உதவும்படி தேவன் நமக்கு சலுகைகளை கொடுத்திருக்கிறார்; அதே வேளையில் நாம் ஒரு போதும் அதற்கு மிஞ்சி எண்ணுவதற்கும் தேவனை ஒரு பெட்டியில் அடைத்து அவருடைய தன்மைக்கு ஏற்ற நிலையில் இல்லாமல் அவரை ஒரு குறுகிய நிலைக்குள் வரையறுக்காதபடிக்கும் இருக்கவேண்டியதும் மிகவும் முக்கியமான காரியம் ஆகும்.

## 10. தேவனை யாராவது பார்த்ததுண்டா?

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்று வேதம் கூறுகிறது (யோவான் 1:18).

- நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார் (யாத் 33:20)
- கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத் 33:11). இங்கு முகமுகமாய் என்கின்ற வார்த்தையானது அவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமான பேச்சு தொடர்பில் இருந்தார்கள் என்பதை காட்டுகிறது.
- நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன் (யாத் 32:30) என்று யாக்கோபு கூறுகிறார். இங்கு யாக்கோபு தேவனை ஒரு தேவதூதருடைய போர்வையில் கண்டார்.
- நாம் தேவனைக் கண்டோம் (நியா 13:22) என்று சிம்சோனின் பெற்றோர்கள் கூறுகிறார்கள். இவர்கள் தேவனை தேவதூதராக கண்டார்கள்.

இது இறையியலின்படி ‘கிறிஸ்டோபணி’ அல்லது ‘ஜியோபணி’ தமிழில் ‘இறை உருவங்கள்’ என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்து மாம்சத்தில் வந்த தேவனாயிருந்தார் எனவே, ஜனங்கள் அவரைக் கண்டபோது தேவனை கண்டார்கள். ஆம்! தேவன் காணப்பட்டார். ஆனால், அதே நேரத்தில் தேவனுடைய மகிமை நிறைந்த நிலையில் ஒருவரும் அவரை கண்டதில்லை; காணவும் முடியாது. கண்களுக்குப் புலப்படும்படியாக அவருக்கு உருவம் கிடையாது. ஆகையால், மனிதனுக்கு தம்மை வெளிப்படுத்தும்போது தனக்குத்தானே ஒரு திரையை அமைத்துக் கொண்டு அதாவது தமது பரிபூரணமான மகிமையை மறைத்துக் கொண்டு, நாம் அவரை பார்க்ககூடிய வடிவங்களில் தோன்றுகிறார். இது அவருடைய உண்மையான மகிமை பொருந்திய நிலையில் இருந்து வித்தியாசமானது ஆகும்.